டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,                எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 149 | 23.11.2025 | SUNDAY | KARTHIGAI : 6 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 149 | 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | கார்த்திகை : 6 | விலை : ரூ.5/–

3 திருவரங்கம் காட்டழகிய சிங்கப்பெருமாள் கோவிலில் சகஸ்ர தீப மகோத்சவம் விழா அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைப்பு

4 காஞ்சியில் மக்களை சந்திக்கும் விஜய்: முக்கிய அறிவுறுத்தல்களை வெளியிட்ட புஸ்ஸி ஆனந்த்

2 'இப்போதும் பாசிஸ்ட் என்பீர்களா?' மம்தானியை 'யெஸ்' சொல்லச் சொன்ன ட்ரம்ப்

# ஆசிரியர்களை திமுக அரசு கைவிடாது முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, நவ.23-

ஆசிரியர்களை திராவிட மாடல் அரசு எந்த சூழ்நிலையிலும் கைவிடாது என்று முதல்வர் ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் ஸ்டாலினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, 2011ஆம் ஆண்டிற்கு முன்பு பணி நியமனம் பெற்று தற்போது ஆசிரியராக பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களும் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது குறித்தும், ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள அச்ச உணர்வினை போக்கும் வகையில் நேற்று தனது தலைமையில் பல்வேறு ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது குறித்தும், அக்கூட்டத்தில் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவித்த கருத்துகளை முதல்வரிடம் தெரிவித்து எடுக்கவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை பெற்றார்.

அப்போது முதல்வர், ஆசிரியர்களின் நலன் காத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், திராவிட மாடல் அரசு எந்த சூழ்நிலையிலும் ஆசிரியர்களைக் கைவிடாது என்றும் உறுதியளித்தார். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் உடனிருந்தார்.

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் பணியில் தொடரவும், பதவி உயர்வு பெறவும் டெட் தேர்வு கட்டாயம் என்று உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரி வரும் அகில இந்திய ஆசிரியர் கூட்டணியினர், டெட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு மாநிலங்களில் இருந்து பிரதமர் அலுவலகத்திற்கு தபால் மூலம் மனு அனுப்பி வருகின்றனர்.





## பாலமேட்டில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு மருத்துவ முகாம் MLA வெங்கடேசன் தொடங்கி வைத்தார்

அலங்காநல்லூர். நவ.23.

மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சியில் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற

நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன்,தொடங்கி வைத்தார். காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. இதில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துபெட்டகம், காசநோயாளிகளுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வட்டார மருத்துவ அலுவலர் வளர்மதி மேற்பார்வையில் 700க்கும் மேற்பட்ட மருத்துவ குழுவினர்கள் உயர் ரத்த அழுத்தம்,சர்க்கரை நோய், மகளிர் குழந்தைகளுக்கான நோய் கண்டறிதல், எலும்பு, நரம்பியல், காது, மூக்கு, கண், தொண்டை போன்ற 17 வகை துறைகளை சார்ந்த மருத்துவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கி மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு, மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சான்றிதழ், தொழிலாளர்களுக்கு நல வாரியச் சான்றிதழ் அங்கேயே பதிவு செய்து வழங்கப்பட்டது. சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த கிராம பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இந்த முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள் திட்டத்தை கொண்டு வந்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர்.

இதில் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் பொற்செல்வன், திமுக மாவட்ட அவைத்தலைவர் பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், நகர செயலாளர்கள் மனோகரவேல் பாண்டியன், ரகுபதி, ஒன்றிய அவைத் தலைவர் நடராஜன், பேரூராட்சிதலைவர்கள் சுமதிபாண்டியராஜன், ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ்,கிழக்கு ஒன்றிய பொருளாளர் சுந்தர்,பேரூராட்சி செயல் அலுவலர் சசிகலா,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, இதயச்சந்திரன், ஈஸ்வரிசீனிவாசன், செந்தில்குமார், சேதுசீனிவாசன், ஜெயமாலா பாலமுருகன், திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் பிரதாப், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்

சந்தனகருப்பு, மற்றும் சதீஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

## ஆத்தூர் தொகுதியில் எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் வாக்காளர்களை சேர்க்க தி.மு.க.வினர் தீவிரம்

### அ.தி.மு.க. தே.மு.தி.க. பா.ஜ.க. பா.ம.க. தவெக, நாம் தமிழர் அ.ம.மு.க வினர் ஆத்தூர் தொகுதியில் கண்டுகொள்ளாத அவல நிலை

சின்னாபட்டி, நவ.23

ஆத்தூர் தொகுதியில் எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் வாக்காளர்களை சேர்க்க தி.மு.க.வினர் தீவிரம் காட்டி வருகின்றனர். தொகுதியில் உள்ள அ.தி.மு.க. தே.மு.தி.க. பா.ஜ.க. பா.ம.க. தவெக, நாம் தமிழர் அ.ம.மு.க வினர் வாக்காளர்களை சேர்க்க ஆர்வம் காட்டாமல் இருப்பது வாக்காளர்களை அதிருப்தி அடைய செய்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 1989ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஆத்தூர் தொகுதி மக்களின் செல்லப் பிள்ளையாக இருந்து வருபவர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதி மக்களால் தென்பாண்டி சிங்கம் என்று செல்லமாக அழைக்கப்படும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொகுதியில் வலம்வந்து மக்களோடு மக்களாக பழகி வருவதால் ஆத்தூர் தொகுதியைப் பொறுத்தவரை முடிசூடா மன்னனாக இருந்து வருகிறார். தொடர்ந்து வெற்றிபெற்று வரும் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் தமிழக சட்டமன்ற வரலாற்றில் இதுவரை எந்தவொரு வேட்பாளரும் பெறாத ஒரு லட்சத்தி 35 ஆயிரத்து 571 வாக்குகள் கூடுதலாக பெற்று மாபெரும் சாதனை படைத்தார். இதே ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் இவரை



(ஐ.பெரியசாமி) எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் அவர்கள் ஆளுங்கட்சியாக இருக்கும்போது 29 ஆயிரம் வாக்குகள் குறைவாக பெற்று தோல்வியடைந்தார். அமைச்சராக இல்லாதபோதே ஆத்தூர் தொகுதியில் சாதனை நாயகராக வலம் வந்த ஐ.பெரியசாமி அவர்கள் தற்போது தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு துறையில் அமைச்சராக பதவியில் இருந்து தற்போது ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக பதவியில் உள்ளார். கடந்த 4 வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் எண்ணற்ற சாதனை திட்டங்களை நிறைவேற்றி உள்ளார். இதுதவிர கலைஞரின் கனவு இல்லத்திட்டப் பயனாளிகளுக்கு நிதி உதவியும் அளித்துள்ளார். இதன் மூலம் 5 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளனர். தற்போது வர இருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலில் ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை எதிர்த்துப்போட்டியிட எதிர் கட்சியினர் தயக்கம் காட்டி வருகின்றனர். குறிப்பாக ஆட்சியில் இருந்த அ.தி.மு.வினரே ஆத்தூர் தொகுதி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட ஆர்வம் காட்டாமல் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கும் என தெரிகிறது. இதுபோல அ.தி.மு.க. கூட்டணி கட்சிகளும் உள்ளனர். இதன் வெளிப்பாடு எஸ்.ஐ.ஆர். சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். ஒரு ஊரில் மட்டுமில்லை, ஆத்தூர் தொகுதியில் உள்ள கிராமங்களிலும் வாக்காளர்களை சேர்க்க ஆர்வம் காட்டாமல் உள்ளனர். இதே நிலைமை ஆத்தூர் தொகுதியில் உள்ள 322 வாக்குசாவடி மைங்களிலும் உள்ளது. ஒரு புறம் தி.மு.க.வினர் பம்பரமாய் சுழன்று வாக்காளர்களை சந்தித்து, வாக்காளர்களை சேர்த்துவரும் நிலையில் மறுபுறம் வேடிக்கை பார்க்கும் நிலையில் எதிர்கட்சியினரின் செயல்பாடுகள் உள்ளன. இதனால் வாக்காளர்கள் மத்தியில் தி.மு.க.வினர் மீது மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடு 2026 சட்டமன்ற தேர்தலில் எதிரொலிக்கும் எனத்தெரிகிறது. வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பது பற்றி கவலைப்படாமல் வாக்காளர்களின் வாக்குரிமை பறிபோகக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் வீடு தவறாமல் சென்று அவர்களுடைய வாக்குரிமை பறிபோகாமல் இருக்க தி.மு.க.வினரின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது.

## திருச்சிஅனைத்து வாக்குச்சாவடிகளிலும் எஸ்.ஐ.ஆர் 2 நாட்கள் சிறப்பு முகாம் : மாநகரச் செயலாளர் மதிவாணன் தகவல்

திருச்சி, நவ.23

திருச்சி மாநகரச் திமுக செயலாளரும், மண்டல தலைவருமான மு. மதிவாணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலில்படி, திருச்சி கிழக்கு மாநகரத்துக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளிலும் எஸ்ஜஆர் சிறப்பு முகாம்

இன்றும்,நாளையும் இரண்டு நாட்கள் எஸ்ஜஆர் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம் அந்தந்த வார்டுக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் வாக்காளர் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் தங்கள் வார்டுக்கு உட்பட்ட அனைத்து பாகத்துக்குரிய BLA 2 வாக்காளர்களை சேர்க்கும் பணியில் முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளவேண்டும்எனமு. மதிவாணன்,மண்டல குழு தலைவரும்,

திருச்சி கிழக்கு மாநகர திமுக செயலாளருமான மு.மதிவாணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# “எஸ்ஐஆர் உண்மையிலேயே ஆபத்தானதாகிவிட்டது” மே. வங்கத்தில் பிஎல்ஓ தற்கொலையால் மம்தா அதிர்ச்சி



கொல்கத்தா, நவ.23-
மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியை ஒருவர், பணிச்சுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டதை அடுத்து சிறப்பு தீவிர திருத்தம் உண்மையிலேயே ஆபத்தனதாகிவிட்டது என்று மம்தா பானர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு வங்கத்தின் நாடியா மாவட்டத்தைச் சேர்ந்த ரிங்கு தராஃப்தார் என்ற ஆசிரியை, பிஎல்ஓ வாக செயல்பட்டு வந்தார். இந்நிலையில், பிஎல்ஓ பணியில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக கடிதம் எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதையடுத்து மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், “மற்றும் ஒரு பிஎல்ஓ கிருஷ்ணா நகரில் இன்று தற்கொலை செய்து கொண்டதை அறிந்து அதிரச்சி அடைந்துள்ளேன். ஆசிரியை ஆன அவர், தனது வீட்டில் தற்கொலை செய்து கொள்வதற்கு முன் எழுதிய கடிதத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இன்னும் எத்தனை உயிர்களை நாம் இழக்க வேண்டும்? இந்த எஸ்ஐஆர்க்காக இன்னும் எத்தனை பேர் இறக்க வேண்டும்? இந்த செயல்முறையால் நாம் இன்னும் எத்தனை சடலங்களை பார்க்கப் போகிறோம்? உண்மையிலேயே இப்போது இது ஆபத்தானதாகிவிட்டது” என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று முன்தினம் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எழுதிய கடிதத்தில், மேற்கு வங்கத்தில் சிறப்பு தீவிர திருத்தத்தை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். அவர் அந்தக் கடிதத்தில், “மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) பணிகள் மீண்டும் மீண்டும் கவலைகளை ஏற்படுத்தி, அது தற்போது ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளதால், இது குறித்து கடிதம் எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் திட்டமிடப்படாமலும் ஆபத்தான முறையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், முதல் நாளில் இருந்தே அதன் செயல்முறை முடங்கியுள்ளது.

அடிப்படை தயார் நிலை, போதுமான திட்டமிடல், தெளிவான தகவல் தொடர்பு இல்லாமல், அதிகாரிகள் மீதும் பொதும க்கள் மீதும் எஸ்ஐஆர் நடவடிக்கையை தேர்தல் ஆணையம் திணித்துள்ளது. அதிகாரிகளுக்கு போதுமான பயிற்சி அளிக்கப்படாதது, கட்டாய ஆவணங்கள் குறித்த குழப்பம், வேலை நேரத்தில் பிஎல்ஓக்கள் வாக்காளர்களைச் சந்திப்பது ஆகியவை, இந்த நடவடிக்கை முழுவதையும் கட்டமைப்பு ரீதியாக பொருத்தமற்றதாக ஆக்கியுள்ளது.

எனவே, தற்போதைய நடைமுறையை நிறுத்துவது, கட்டாயப்படுத்துவதை நிறுத்துவது, சரியான பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குவது ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்போதைய செயல் முறையை முழுமையாக மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

இதை தாமதமின்றி செய்யா விட்டால், அரசு அமைப்பு, அதிகாரிகள் மற்றும் குடிமக்களுக்கு ஏற்படும் விளைவுகள் மீள முடியாததாக இருக்கும். பொறுப்புணர்வுடனும், மனிதநேயத்துடனும், தீர்க்கமான உணர்வுடனும் இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என தெரிவித்திருந்தார்.

# ‘இப்போதும் பாசிஸ்ட் என்பீர்களா?’ மம்தானியை ‘யெஸ்’ சொல்லச் சொன்ன ட்ரம்ப்



வாஷிங்டன், நவ.23-
அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பை நியூயார்க் நகர மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜொரான் மம்தானி சந்தித்தார். அப்போது அவரிடம், “நீங்கள் இப்போதும் ட்ரம்ப்பை ஒரு பாசிஸ்ட் என்பீர்களா?” எனக் கேள்வி எழுப்பப்பட, அதற்கு ட்ரம்ப் ரியாக்ட் செய்தவிதம் கவனம் பெற்றுள்ளது.

முன்னதாக இந்த சந்திப்பு குறித்து ட்ரம்ப், “நியூயார்க் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜொரான் மம்தானியுடனான சந்திப்பு சிறப்பானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் இருந்தது” என்று கூறினார். ஓவல் மாளிகையில் தனக்கு அருகில் மம்தானி நிற்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

மம்தானி ட்ரம்ப் சந்திப்பு தனிப்பட்ட சந்திப்பாக நடந்தது. இந்த சந்திப்புக்குப் பின்னர் இருவருமே கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அவர்களின் குரலில் முன்பு நிலவிய எதிர்ப்பு தொனி சற்றே தணிந்திருந்ததை கவனிக்க முடிந்தது.

அப்போது பேசிய ட்ரம்ப். “மம்தானி எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறாரோ நான் அவ்வளாவு மகிழ்ச்சியாக இருப்பேன். புதிய மேயர் அவர் பணிகளில் வெற்றி பெற விரும்புகிறேன். எங்களுக்குள் ஒரே ஒரு விஷயம் தான் பொதுவானது. அது நியூயார்க் நகரம் சிறப்பாக இருக்க வேண்டுமென்பது. அதை நாங்கள் சிறப்பாகச் செய்ய வாஞ்சையோடு இருக்கிறோம். மேலும், மேயர் பதவியேற்றதும் மம்தானி அதிக கெடுபிடிகளைத் தளர்த்த வேண்டும் எனக் கோருகிறேன். இந்த சந்திப்புக்குப் பின்னர் அவர் தனது பார்வைகளில் சிலவற்றில் மாற்றம் செய்வார் என்று நம்புகிறேன். நான் அதிபரான பின்னர் எனது சில பார்வைகளும் மாறியுள்ளன. அந்த வகையில் பழமைவாதிகளுக்கு சில ஆச்சர்யங்களை மம்தானி நல்குவார் என நம்புகிறேன்” என்றார்.

மம்தானி பேசுகையில், “அதிபர் கூறியதுபோல் இந்தச் சந்திப்பு நியூயார்க் நகரின் நலன்கள் மீதான பரஸ்பர அன்பு, ஈர்ப்பில் கவனத்தை குவிப்பதாக இருந்தது. இது ஆக்கபூர்வமான சந்திப்பாக இருந்தது.

நியூயார்க் நகரின் வீட்டு வாடகை, மளிகைப் பொருட்களின் விலை, அத்தியாவசிப் பொருட்களின் விலைவாசி பற்றி நாங்கள் பேசினோம். மக்கள் சந்திக்கும் நெருக்கடிகளைப் பற்றி பேசினோம். நியூயார்க் நகரின் 8.5 மில்லியன் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக ஆலோசித்தோம்.” என்றார்.

இப்போதும் பாசிஸ்ட் என்பீர்கள்? அப்போது மம்தானியிடம் செய்தியாளர் ஒருவர், “ட்ரம்ப்பை நீங்கள் பாசிஸ்ட் என விமர்சித்துள்ளீர்கள். இப்போதும் அதைச் சொல்வீர்களா?” என்று கேட்டார். அதற்கு மம்தானி, “ஆம், நான் அவரை அப்படி விமர்சித்துள்ளேன்.” என்று சொல்லி விளக்கமளிக்க முற்பட்டபோது ட்ரம்ப் குறுக்கிட்டு, “இட்ஸ் ஓகே. நீங்கள் ஆம் என்றே சொல்லலாம். ஆம் என்பது விளக்குவதைவிட எளிது. நான் ஏதும் நினைக்கமாட்டேன்.” என்றார். அப்படிச் சொல்லும்போது ட்ரம்ப் மெலிதாக மம்தானியின் கையில் தட்டியும் கொடுத்தார். மம்தானியும் புன்னகையுடன், “ஆம்” என்றார்.

நியூயார்க் மேயர் தேர்தலின்போது ட்ரம்ப்பை மம்தானி ‘பாசிஸ்ட்’ என்று விமர்சித்ததும், பதிலுக்கு மம்தானியை ட்ரம்ப் ‘கம்யூனிஸ்ட்’, ‘ஜிஹாதிஸ்ட்’ என்று விமர்சித்ததும், அதற்கும் ஒருபடி மேலே சென்று ‘புரட்சிகர இடதுசாரி மனப்பிறழ்ச்சி கொண்டவர்’ என்று கடும் சொற்களால் தாக்கியதும் உலகளவில் விவாதப் பொருளானது.

இந்நிலையில் இந்த சந்திப்புக்குப் பின்னர் ட்ரம்ப், “இந்த ஓட்டத்துக்காகவே மம்தானியை நான் பாராட்டுவேன். எங்களுக்குள் எல்லாம் சரியாகும். நாங்கள் இருவருமே வலுவான நியூயார்க்கை விரும்புகிறோம்.” என்று கூறியுள்ளார். மம்தானி, “எங்களுக்குள் நிறைய கருத்து வேற்றுமைகள் உள்ளன. ஆனால் இப்போது இருவரும் நியூயார்க் வலுவாக இருக்க விரும்புகிறோம். ஆனால், நியூயார்க்கர்களுக்கு எதிராக ஏதேனும் கொள்கை வகுக்கப்பட்டால் முதல் எதிர்ப்புக் குரல் என்னுடையதுதான்” என்று கூறியுள்ளார்.



# கோவை செம்மொழி பூங்காவை டிசம்பர் 1 முதல் பார்வையிடலாம்: அமைச்சர் கே.என் நேரு பேட்டி

கோவை, நவ.23-
கோவை செம்மொழி பூங்காவை டிசம்பர் 1ம் தேதி முதல் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் கே.என் நேரு தெரிவித்தார்.கோவை காந்திபுரத்தில் அவர் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:

கோவை செம்மொழி பூங்காவை வருகிற 25ம் தேதி காலை 11 மணிக்கு திட்டமிட்டபடி முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

முதலில் பூங்கா முகப்பில் கல்வெட்டை திறக்கிறார். பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்ட பின்பு பள்ளி மாணவ, மாணவிகளை சந்திக்கிறார். தொடர்ந்து பூங்கா வளாகத்தில் பொழுதுபோக்கு அம்சத்திற்காக அமைக்கப்பட்டுள்ள ஆம்பி தியேட்டரில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிடுகிறார். செம்மொழி பூங்காவை பொதுமக்கள் பார்வையிட கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு டிசம்பர் 1ம் தேதி முதல் அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.




# “வட மாநில வெண்ணெய் கொள்முதல் பிரச்சினையில் ஆவினுக்கு பாதிப்பில்லை” அமைச்சர் மனோ தங்கராஜ்

மதுரை, நவ.23-
“வட மாநிலங்களில் கொள்முதல் செய்த வெண்ணெயில் துர்நாற்றம் வந்ததால் திருப்பி அனுப்பிவிட்டோம். இதனால் ஆவினுக்கு எந்த பாதிப்புமில்லை” என அமைச்சர் மனோ தங்கராஜ் மதுரையில் தெரிவித்தார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று தேசிய பால் தினத்தை முன்னிட்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் முன்னிலை வகித்தனர். இதில் பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் பங்கேற்று ஆலோசனை செய்தார். இதில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மனோ தங்கராஜ் கூறியது: “மதுரை ஆவின் கடந்த காலங்களைப் போல் இல்லாமல் நல்ல லாபத்தில் இயங்கும் சங்கமாக மாறியிருக்கிறது. தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்த தேனி மாவட்டத்திலுள்ள ஆவின் நிறுவனம் கடந்த 7 மாதமாக லாபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து சங்கங்களும் லாபத்தில் இயங்கி வருகிறது.

மதுரை ஆவின் லாபத்தில் இயங்கு வதால் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு ரூ.1 ஊக்கத் தொகை, தீவனம் ஒரு கிலோவுக்கு ரூ. 2 மானியம் வழங்கினோம். ஆவின் பொருட்கள் விற்பனையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பால் கொள்முதலில் 50 ஆயிரம் லிட்டர் அதிகரித்துள்ளது. தரத்திற்கேற்ற விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக 10,450 கறவை இயந்திரங்கள் வழங்கி, அதிகபட்ச தரத்தை உத்தரவாதப்படுத்தியுள்ளோம்.

வட மாநிலங்களில் வெண்ணெய் கொள்முதல் செய்ததில் குறைபாடு என புகார் வந்தவுடன் உடனடியாக ஐஏஎஸ் அதிகாரியை அனுப்பி சரிபார்த்தோம். என்சிடிஎப்ஐ போர்ட்டலில் ஆன்லைன் மூலம் வெளிப்படையாகவே எந்தப் பொருளையும் வாங்குகிறோம். தரம் குறைந்தால் உடனடியாக கண்டுபிடித்து திருப்பி அனுப்பிவிடுவோம்.

அந்த வகையில் வெண்ணெய் கொள்முதல் செய்ததில் ஒரு துர்நாற்றம் இருப்பது தெரியவந்ததால், அதை திருப்பி அனுப்பிவிட்டோம். அந்த நிறுவனத்துக்கு பணம் எதுவும் வழங்கவில்லை. அதனால், ஆவினுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

ஆவினில் நிரந்தரமான விலை, பணத்துக்கு உத்திரவாதம் என்பதால் ஆவினில் பால் கொடுக்க முன்வருகின்றனர். மேலும், ஆவினில் கொடுப்பதுதான் பாதுகாப்பானது என நம்புகின்றனர்” என்று அவர் கூறினார்.

# “மீனவர் நலனுக்கான கட்சி, அமைப்புகளில் சேர உள்ளேன்” காளியம்மாள் தகவல்



ராமேசுவரம், நவ.23-
ராமேசுவரம் அருகே பாம்பன் வடக்கு மீன்பிடித் துறை முகத்தில் மீனவர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் உலக மீனவர் தினவிழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், நாம் தமிழர் கட்சியிலிருந்து விலகிய காளியம்மாள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தை ஆண்ட திராவிட கட்சிகள் மீனவ மக்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்காமல் புறக்கணித்து வருகின்றன.

மீனவர்களுக்கு வழங்கிய சுனாமி வீடுகளை புதுப்பிக்கவில்லை. கடற்கரையோரங்களை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஒதுக்கி, மீனவர்கள் அப்புறப் படுத்தப்படுகின்றனர்.

வரும் காலங்களில் மீனவ அமைப்புகளை ஒன்றிணைத்து, மீனவர்கள் நலனுக்காக தொடங்கப்படும் அமைப்பு அல்லது கட்சியில் என்னை இணைத்துகொண்டு மீனவர்களுக்கு பாதுகாப்பாக செயல்படுவேன் என்றார்.

# “கரூர் வெண்ணெய்மலை கோயில் இனாம் நில விவகாரத்தில் மக்கள் ஏமாறமாட்டார்கள்” - எம்.ஆர்.விஜயபாஸ்கர்



கரூர், நவ.23-
“கரூர் வெண்ணெய்மலை பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் இனாம் நில விவகாரம் தொடர்பாக குழு அமைப்போம் என்பதற்கெல்லாம் மக்கள் ஏமாறமாட்டார்கள்.” என அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இன்று (நவ. 22ம் தேதி) செய்தியாளர்களிடம் கூறியதாவது: கரூர் வெண்ணெய்மலை கோயில் இனாம் நில விவகாரத்தில் 7 முறை கடைகள், வீடுகளுக்கு சீல் வைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்ததே மக்கள் இடங்கள் வாங்கி வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக கடந்த வாரம் பேட்டியளித்த கரூர் எம்எல்ஏ, பேர் சொல்லாமல் ‘ஃப்ராடு, 420’ என்ற வார்த்தைகளை பயன்படுத்தி உள்ளார். அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் பேசியுள்ளார். இதுதொடர்பாக சமூக வலைத்தளங்களில் மீம்ஸ்களை பரப்பி வருகின்றனர்.

ஆள் கடத்தல், சொத்துக்கள் அபகரிப்பு, போலி மதுபானம் தயாரிப்பு, ஸ்பிரிட் கடத்தல், வேலை வாங்கி தருவதாகப் பணம் பெற்று மோசடி, 25,000 பேருக்கு இலவசமாக 3 சென்ட் நிலம் வழங்கி அதில் கான்கிரீட் வீடு கட்டி தருவதாகக் கூறியது, வெள்ளிக் கொலுசு எனக்கூறி கல் கொலுசு கொடுத்தது, 11 மணிக்கு ஆட்சிக்கு வந்தால் 11.05 மணிக்கு மாட்டு வண்டி தொழிலாளர்கள் ஆற்றில் மணல் அள்ளலாம்... அதிகாரி தடுக்கமாட்டார்கள் தடுத்தால் அந்த அதிகாரி இருக்கமாட்டார் என ஏழை, எளிய மாட்டு வண்டி தொழிலாளர்களுக்கு வாக்குறுதி அளித்தது எனப் பல்வேறு பொய் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

அதேபோல், கரூர் வெண்ணெய்மலை கோயில் இனாம் நில விவகாரம் 2012ம் ஆண்டு முதல் உள்ளது. ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் பட்டா வழங்குவதாகக்கூறி மக்களின் வாக்குகளை பெற்றவர் தான் 420, ப்ராடு. அதிமுக ஆட்சியில் தான் வெண்ணெய்மலை கோயில் இனாம் நில விவகாரம் தொடர்பாக வழக்கு தொடர்ந்ததாக கூறுகிறார். தமிழ்நாடு முழுவதும் இனாம் நில விவகாரம் உள்ளது.

இதுதொடர்பாக முதலில் வழக்கு தொடர்ந்த போது 15 சர்வேக்கள் மட்டுமே காட்டப்பட்டன. இதுதொடர்பாக நீதிபதி இனாம் நிலங்களில் குடியிருப்பவர்கள் ஒரு தொகையை நிர்ணயம் செய்து கட்டிவிட உத்தரவிட்டார்.

அப்போது 200 மனுதாரர்கள் இருந்தனர். இந்நிலையில் பணமே கட்டாமல் பட்டா தருவதாக தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நம்பி மக்கள் அதனை கைவிட்டுவிட்டனர். அதன்பின் கரோனா காலத்தில் நீதிமன்றம் செயல்படவில்லை. அதன்பிறகு தேர்தல் வந்துவிட்டது.

திருத்தொண்டர் அறக்கட்டளை அறங்காவலர் ராதாகிருஷ்ணனுக்கு நிதி உதவி செய்வதாக கூறுகிறார். நான் அவரை பார்த்தது கூட இல்லை. இதனை அவரே நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார்.

ஆவணங்களில் குளறுபடி என்பவர் அவற்றை சரி செய்திருக்கலாமே. நான்கரை ஆண்டுகளில் ஒண்ணே காலாண்டு புழலில் இருந்தவர் தனது கையாலாகாததனத்தை திசை திருப்பவே ஏதேதோ கூறி வருகிறார். அரசு இந்த விவகாரத்தை சரியான முறையில் கையாள வேண்டும். குழு அமைப்போம் என்பதற்கெல்லாம் மக்கள் ஏமாறமாட்டார்கள்.

கரூர் மாவட்டத்தில் அறிவிக்கப்படாத மணல் குவாரிகள் செயல்படுகின்றன. இதன் மூலம் நாளொன்றுக்கு ரூ.1 கோடி மதிப்புள்ள மணல் திருட்டு நடைபெறுகிறது. திமுக நிர்வாகிகள் இதற்கு பொறுப்பாளர்களாக இருந்த நிலையில் தற்போது முன்னாள் அமைச்சரின் பினாமியான ஒப்பந்ததாரர் அதற்கு பொறுப்பாக உள்ளார். 420 யார், ஃப்ராடு என்பது மக்களுக்கு தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.




■ கரூர் மாவட்ட ஆட்சியர் திரு. மீ.தங்கவேல் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரு. கு.விமல்ராஜ். மற்றும் இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.ச.சிங்காரம் ஆகியோர் உள்ளனர்.




■ வாக்காளர் சிறப்பு திருத்தம் குறித்த விளக்கக் கூட்டம் பாஜக சார்பில் திருச்சி மாநகர், மாவட்ட பாஜக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ., முன்னாள் மாநிலத் தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர் அண்ணாமலை முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், மாநில நிர்வாகிகள் ராமலிங்கம் கருப்பு முருகானந்தம் சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். கூட்டத்தில் தமிழகத்தில் உள்ள 66 மாவட்ட தலைவர்கள் மற்றும் சட்டமன்ற பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருவரங்கம் காட்டழகிய சிங்கப்பெருமாள் கோவிலில் சகஸ்ர தீப மகோத்சவம் விழா அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைப்பு

திருச்சி, நவ.23-

திருச்சி மாவட்டம், திருவரங்கம் காட்டழகிய சிங்கப்பெருமாள் கோவிலில் லெட்சுமி நரசிம்மர் சன்னதியில் 24ம் ஆண்டு சகஸ்ர தீபம் ஏற்றும் நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு ஸ்ரீவில்லி புத்தூர் 24 ஆவது பீடம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமி மங்களா சாசனத்துடன் சுவாமி முன்னிலையில்,



தமிழக இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு குத்து விளக்கேற்றி சர ஸ்ர தீப நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார்.

முன்னதாக காலை நாதஸ்வர இன்னிசை கச்சேரியும், மாலை விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணம் நிகழ்ச்சியும், பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இதைத் தொடர்ந்து நாம சங்கீர்த்தனம் நடைபெறுகிறது. மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



■ மலைக்கோட்டை அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோவிலில் வருகின்ற 03.12.2025 அன்று நடைபெறும் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, தீபத்திற்கான திரி தயாரிக்கும் பணி 21.11.25 அன்று துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.



# திருப்பூர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அங்கன்வாடி மையம் திறந்து வைத்தார்

திருப்பூர், நவ.23-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்.மு.பெ. சாமிநாதன் அவர்கள் திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.16.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், வடக்கு மாவட்ட செயலாளர் மாநகராட்சி மாண்புமிகு மேயர் தினேஷ்குமார் மாநகர செயலாளர் தங்கராஜ். திமுக ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன்.திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.விஜயகுமார், உதவி பொறியாளர்கள் திரு.கார்த்திக்குமார், திரு.மனோஜ் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் அங்கன்வாடி ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டார்கள்.





■ அரசு பள்ளியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருப்பூர் மாநகராட்சி 22 வது வார்டு குமரானந்த புரம் அரசு பள்ளியில் பாரதிய ஜனதா கட்சி வடக்கு மாவட்ட பொதுச் செயலாளர் நடராஜ் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு பண்டிட் தீனதயாள் உபாத்தியாயா சேவை மய்யம் சார்பாக அப்பள்ளியில் பயிலும் 800க்கும் மேற்பட்ட குழந்தை செல்வங்களுக்கு நோட் பேனா கிப்ட் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், சேவை மைய நிர்வாகிகள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவச் செல்வங்கள் பங்கேற்றனர்.

# கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்களை எம்.பி.சி. பட்டியலில் சேர்ப்பதற்கு திமுக என்றும் உறுதுணையாக இருக்கும் கிறிஸ்துவ வன்னியர் சங்க திறப்பு விழாவில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் பேச்சு

சின்னாளபட்டி, நவ.23-

வன்னிய கிறிஸ்துவ சமுதாய மக்களை எம்.பி.சி. பட்டியலில் சேர்ப்பதற்கு திமுக என்றும் உறுதுணையாக இருக்கும் என்று கிறிஸ்துவ வன்னியர் சங்க திறப்பு விழாவில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் பேசியதோடு கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்களை எம்.பி.சி.பட்டியலில் சேர்ப்பதற்கு முதல்வர் மற்றும் துணை முதல்வர் கவனத்திற்கு கொண்டுசெல்வேன் ஐ.பி.செந்தில் குமார் உறுதி அளித்தார்.





திண்டுக்கல் மதுரை நான்குவழிச்சாலையில் அ.வெள்ளோடு பிரிவு அருகே கிறிஸ்துவ வன்னிய சங்க அலுவலக திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு மாநில தலைவர் வி.பி.ஏ.ஜெயசுந்தர், மாநில பொருளாளர் மரிய செல்வராஜ், ஆகியோர் தலைமை தாங்கினார்கள். சிறுமலைபிரிவு முதியோர் இல்ல அருட்தந்தை அருமைசாமி, முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட திண்டுக்கல் கிழக்கு மாவட்டதிமுக செயலாளரும் பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் அலுவலகத்தை திறந்து வைத்து பேசும்போது ஆத்தூர் தொகுதி மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டத்தில் வசிக்கும் கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்களுக்கு திமுக என்றும் உறுதுணையாக இருக்கும் கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்கள் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வந்தபோது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை மனு கொடுத்தனர். மனுமீது நடவடிக்கை எடுக்க நான் மாண்புமிகு முதல்வர் மற்றும் துணை முதல்வரை சந்தித்து கோரிக்கைவிடுத்து விரைவில் கிறிஸ்துவ வன்னிய சமுதாயமக்களை எம்.பி.சி.பட்டியலில் சேர்க்க உறுதுணையாக இருப்பேன் என்றார். இதுதவிர ஆத்தூர் தொகுதியில் வசிக்கும் கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்கள் கொடுக்கும் அனைத்து கோரிக்கைகளையும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரும், திமுக மாநில துணைப்பொதுச் செயலாளருமான அய்யா ஐ.பெரியசாமி அவர்கள் நிறைவேற்றி கொடுத்திருப்பது அனைவருக்கும் தெரியும் என்றும், கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்களுக்கு திமுக அரசு உறுதுணையாக இருக்கும் என்றார். விழாவில் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் எஸ்.சூசைராபர்ட், திண்டுக்கல் மாவட்ட காங்கிரஸ் தலைவர் துரைமணிகண்டன், கிறிஸ்துவ வன்னியர் சங்க மாநில துணைத்தலைவர் அமலிநகர் பிரிட்டோ, மறைமாவட்ட எம்.பி.சி.பணிக்குழு செயலாளர் அருட்தந்தை ரூபேஸ், அருட்தந்தை.எம். ஜஸ்டின் திரவியம், நிலக் கோட்டை ஒன்றிய முன்னால் துணைப்பெருந்தலைவர் யாகப்பன், வெள்ளோடு பங்குதந்தை. எம்.ஏ.அந்தோனி, மாநில மகளிர்அணி தலைவர் பி.மரியபுஸ்பம், அரசு ஒப்பந்தகாரர் என்.பஞ் சம்பட்டி மெல்வின், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வங்கக்கடலில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

*சென்னை, நவ.23–*

*வங்கக்கடலில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை மறுநாள் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் தாழ்வு மண்டலமாக வலுவடையும் என இந்திய வானிலை மையம் கூறியுள்ளது. தெடந்து மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் தென்மேற்கு வங்கக்கடலில் வலுவடையக் கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தற்போது வரை இயல்படை விட 6% குறைவாக பெய்துள்ளது. பருவமழை காலத்தில் இயல்பாக 311 மி.மீ மழை பொழியும் நிலையில் தற்போது வரை 293.9 மி.மீ. மட்டுமே மழை பெய்துள்ளது. சென்னையில் வடகிழக்கு பருவமழை தற்போது வரை இயல்பை விட 23% குறைவாக பெய்துள்ளது. பருவமழை காலத்தில் இயல்பாக 562.4 மி.மீ மழை பொழியும் நிலையில் தற்போது வரை 431.6 மி.மீ மட்டுமே மழை பெய்துள்ளது. இந்த நிலையில் வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக மழை பொழிவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நெல்லை மாவட்டம் ஊத்து பகுதியில் 12 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. நாலுமுக்கு 11 செ.மீ., காக்காச்சி, மாஞ்சோலையில் தலா 9 செ.மீ., மைலாடியில் 7 செ.மீ., சிவகங்கை, கன்னியாகுமரியில் தலா 6 செ.மீ., லால்பேட்டை, பாபநாசத்தில் தலா 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.*




■ மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள், மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கள்ளிமந்தையத்தில் திண்டுக்கல் மண்டல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்., சார்பில், 3 புதிய நகரப் பேருந்துகள் மற்றும் ஒரு புனரமைப்பு செய்யப்பட்ட பேருந்து என மொத்தம் 4 பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆவின் தேசிய பால் தினத்தை முன்னிட்டு, பால் உற்பத்தியாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப. மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ தென்காசி மாவட்டம் பண்பொழியில் சாய் இண்டர்நேஷனல் சோசியல் சர்வீஸ் அறக்கட்டளை சார்பாக, பெண்களுக்கான இலவச சுய தொழில் பயிற்சியாக, ஆரி வொர்க், அழகு கலை பயிற்சி வகுப்பு மற்றும் சுய தொழில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதனை அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் வெங்கடேஷ்வரன் தலைமை வகித்து நடத்தினார். மாநில நிர்வாகி தேவி, மாவட்ட நிர்வாகிகள் லாவண்யா மற்றும் சமூக ஆர்வலர் சரண்யா, ஆரிவொர்க் பயிற்சியாளர் நந்தினி கலந்துகொண்டனர்.

# 'பாட்டிலுக்கு பத்து ரூபாய்' பாட்டுப் பாடும் விஜய் கூட மதுக்கடையை மூடுவேன் என சொல்லவில்லை: சீமான்

திருநெல்வேலி, நவ.23-

"பாட்டிலுக்கு பத்து ரூபாய் என பாட்டு பாடும் தம்பி விஜய் கூட ஆட்சி க்கு வந்தால் மதுக்கடையை மூடுவேன் என சொல்ல வில்லை" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆதங்கம் தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்டம் கூத்தன்குழியில் நாம் தமிழர் கட்சி சார்பில் கடலம்மா மாநாடு அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பணகுடி பகுதியில் மேய்ச்சல் நில உரிமையை நிலைநாட்ட மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மாடு மேய்க்கும் போராட்டத்தை நடத்த அவர் திட்டமிட்டிருந்தார்.



ஆனால், இந்தப் போராட்டத்துக்கு காவல் துறை அனுமதி அளிக்கவில்லை. திருநெல்வேலியில் சீமான் தங்கியிருந்த கட்சி நிர்வாகி திருமண மண்டபத்தின் முன்பு போலீஸார் குவிக்கப்பட்டனர். இதனால் அவர் போராட்டம் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், இன்று பிற்பகலில் செய்தியாளர்களிடம் சீமான் கூறியது: "பணகுடி பகுதி மலையில் உள்ள மேய்ச்சல் நிலங்களை அரசே ஆக்கிரமிக்கிறது.

தமிழக சட்டப் பேரவை தலைவருக்கு அங்கே நிலம் இருக்கிறது. அரசின் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நான் பணகுடி சென்றால் பிரச்சினையாகிவிடும் என்பதால் காவல் துறை அனுமதி மறுத்துள்ளது.

கால்நடைகளின் வாழ்விடத்தில் அவைகளுக்கு அனுமதி வழங்காமல் கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது; தமிழக தேவைகளுக்கு மட்டும் மணல், கற்கள் உள்ளிட்ட இயற்கை வளங்களை பயன்படுத்தினால் 300 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்த முடியும்.

தமிழகத்தின் பால் தேவையை ஆந்திர மாநிலம் பூர்த்தி செய்கிறது. அங்கிருந்து வரும் பால் தூய்மையானதா என்ற கேள்வி எழுகிறது. மெட்ரோ ரயில் திட்டம் ஒரு தோல்வியுற்ற திட்டம். சென்னையில் மெட்ரோ திட்டங்கள் மூலம் தூண்களாகவே நகர் காட்சியளிக்கிறது.

அது சிங்காரச் சென்னை இல்லை, தூண் சென்னை ஆக உள்ளது. நாங்கள் இருப்பதால் பரந்தூர் விமான நிலையம் வராது. மக்களுக்கு மறைமுகமாக இலவச பேருந்து, மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்டவை மூலமாக பணம் கொடுக்கப்படுகிறது.

இலவச திட்டங்கள் அவசியம் இல்லை. இந்தியாவில் அதிக கடன் பெற்ற மாநிலமாக தமிழகம் உள்ளது. தமிழகத்திற்கு 10 லட்சம் கோடி ரூபாய் கடன் இருக்கிறது. திமுகவிற்கு மாற்று அதிமுக அல்ல.

திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ் ஆகியவற்றுக்கு இடையே எந்தக் கொள்கை மாற்றமும் இல்லை. பாட்டிலுக்கு பத்து ரூபாய் என பாட்டு பாடும் தம்பி விஜய் கூட ஆட்சிக்கு வந்தால் மதுக்கடையை மூடுவேன் என சொல்லவில்லை.

பிஹாரில் பெண்களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுத்து பாஜக வெற்றியை பெற்றுவிட்டது. அதுபோல் தமிழகத்தில் பொங்கலுக்கு ரூ.3 ஆயிரம் கொடுக்கலாம். ஏன் ரூ.5 ஆயிரம்கூட கொடுக்கலாம்.

வாக்கிற்கு பணம் கொடுக்காத மாற்று அரசியல் தமிழகத்தில் தேவை" என்று அவர் தெரிவித்தார். மீண்டும் விஜய் பிரச்சார பயணம் தொடங்க திட்டமிட்டு இருப்பது குறித்த கேள்விக்கு அவர் பதில் அளிக்கவில்லை.

# மதுரையில் டிச.3 வரை உணவுத் திருவிழா சிறப்பு அம்சங்கள் என்னென்ன?

சென்னை, நவ.23-

மதுரையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இது தொடர்பாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களது தயாரிப்பு பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை ‘சாராஸ்’ எனப்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து மதுரை, தமுக்கம் மைதானத்தில் மதி கண்காட்சி (சாராஸ் மேளா) மற்றும் உணவுத் திருவிழாவை வரும் நவ.22 ம் தேதி முதல் நடத்துகிறது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழாவை தொடங்கி வைத்து, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குகிறார். நவ. 22 முதல் டிச. 3ம் தேதி வரை நடைபெறும் கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழாவுக்கு அனுமதி இலவசம். பொதுமக்கள் காலை 10 முதல் இரவு 8 மணி வரை பார்வையிடலாம்.

மாலை நேரங்களில் தப்பாட்டம், கரகாட்டம், தெருக்கூத்து, நடனம், மேற்கத்திய இசை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் தமிழகம் முழுவதும் உள்ள சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களான சணல் பொருட்கள், துணிப்பைகள், ஐம்பொன் நகைகள், மரச் சிற்பங்கள், பட்டுப் புடவைகள், எம்ப்ராய்டரி ஆடைகள், கைத்தறி துண்டுகள், கைவினைப் பொருட்கள், கண்ணாடி ஓவியங்கள், பருத்தி ஆடைகள் போன்றவற்றை விற்பனை செய்யும் வகையில் 171 அரங்குகளும், பிற மாநிலங்களை சேர்ந்த பொருட்களை விற்பனை செய்ய 29 அரங்குகளும் நிறுவப்பட்டுள்ளன.

உணவுத் திருவிழாவில் 50 அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளன. இதில் கேரளாவின் பாரம்பரிய உணவுகளை விற்பனை செய்ய 2 அரங்குகளும், தமிழகத்தின் உணவுகளான கொங்கு மட்டன் பிரியாணி, மீன் பிரியாணி, கேரட் பாலி, செட்டிநாடு ஸ்நாக்ஸ், பள்ளிப்பாளையம் சிக்கன் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட உணவு வகைகளை சமைத்து பரிமாறும் வகையில் 23 அரங்குகளும் அமைக்கப் பட்டுள்ளன. இதுதவிர ஆயத்த உணவு வகைகளை விற்பனை செய்ய 25 அரங்குகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “மெட்ரோ ரயில்களுக்கு அனுமதி மறுப்பு மத்திய அரசின் வஞ்சனை” - அமைச்சர் சிவசங்கர்

அரியலூர், நவ.23-

மத்திய அரசு வஞ்சகத்தோடு தான் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரயில்களுக்கு அனுமதி வழங்காமல் நிறுத்தி இருக்கிறார்கள் என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், “தமிழகத்தில் இயங்கி வருகின்ற பழைய பேருந்துகளை எல்லாம் மாற்றி புதிய பேருந்துகள் இயக்குவதற்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டதன் அடிப்படையில், புதிய பேருந்துகள் கடந்த ஆண்டிலிருந்து படிப்படியாக மாற்றப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்று அரியலூரில் நான்கு பழைய வழித்தடங்களில் இயங்கிக் கொண்டிருந்த பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

அதேபோல செந்துறையில் ஐந்து புதிய பேருந்துகள் வழக்கத்தில் கொண்டுவரப்படுகிறது. பொதுமக்கள் பழைய பேருந்துகளிலேயே பயணப்பட்டு சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையை மாற்றி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதேபோன்று புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இயந்திரம் மூலம் டிக்கெட் வழங்குவது தமிழ்நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளது.

சென்னையில் மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போது, 750 பேருந்துகள் சிஎன்ஜி பேருந்துகளாக மாற்றுவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. தொலைதூரம் இயங்குகின்ற அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 20 வால்வோ பேருந்துகள் வாங்குவதற்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டிருக்கிறார். இது அடுத்த மாதத்தில் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

போக்குவரத்துத் துறையில் ஜிபே முறைக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. படிப்படியாக அந்தப் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மக்கள் அதை பயன்படுத்துகிறார்கள்.

மின்சாரப் பேருந்துகளைப் பொறுத்தவரை ‘ஜிசிசி மெத்தட்’ என்கிற ஒப்பந்த அடிப்படையில் இயக்குவதற்கான நடவடிக்கையை நாம் எடுத்து அந்தப் பணியை சென்னையிலே தொடங்கி விட்டோம். ஆனால் மத்திய அரசு இப்பொழுது தான் கொண்டு வருகிறார்கள். நாம் அதற்காக புதிய பேருந்துகளை வாங்க வேண்டும் என்றால் மின்சாரப் பேருந்துகள் மிகுந்த விலை கொண்ட பேருந்துகளாக இருக்கின்றன . அவற்றைப் அந்த நிறுவனங்களே பராமரித்தால் தான் சரியாக இருக்கும். அதன்பேரில், ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பித்தவர்களுக்கு அந்த டெண்டர் அடிப்படையில் வழங்கப் பட்டிருக்கிறது.

எனவே நம்முடைய மாநிலத்துக்கு எது உகந்ததாக இருக்குமோ அந்த அடிப்படையில் செய்கிறோம். மெட்ரோ ரயிலை பொறுத்தவரை கோவை, மதுரையில் மக்கள் தொகை குறைவாக இருக்கிறது என்கின்ற ஒரு காரணத்தை தான் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட குறைவாக இருக்கின்ற வட இந்தியாவில் இருக்கின்ற இந்தூர் போன்ற நகரங்களில் இந்த மெட்ரோ ரயிலை துவக்கி இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் வாரத்துக்கு 80 பேர் பயணிக்கின்ற நிலையெல்லாம் பல மெட்ரோ ரயில்களில் இருக்கிறது. ஆனால் நிச்சயமாக கோவையிலும், மதுரையிலும் இது பெருமளவில் மக்கள் பயன்பாட்டுக்குச் சரியாக இருக்கும் என்கின்ற காரணத்தினால் தான் நாம் இதைக் கேட்டிருக்கின்றோம்.

பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் வானதி சீனிவாசன், அடுத்து எங்கள் ஆட்சி அமைந்தால் நாங்கள் மெட்ரோ ரயிலைக் கொண்டு வருவோம் என்று சொல்கிறார்.

நயினார் நாகேந்திரன் அவர் ஊருக்காக சொல்கிறார் என்கிறார். அந்தக் கட்சியிலே முதலில் அவர்களுக்கு ஒருமித்த கருத்து இல்லை. எப்படி தமிழ்நாட்டை ஏமாற்றுவது என்கின்ற எண்ணத்தில் வெவ்வேறு குரலிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக நீட் தேர்வில், புதிய கல்வி கொள்கையை அறிமுகப்படுத்துவதில், மாநில உரிமைகளை பறிப்பதில், ஆளுநரை வைத்து சட்டங்களுக்கு அனுமதி கொடுக்காமல் தடுப்பதில் மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு வஞ்சகம் செய்து வருகிறதோ அதே வஞ்சகத்தோடு தான் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரயில்களுக்கு அனுமதி வழங்காமல் நிறுத்தி இருக்கிறார்கள்.

இது அப்பட்டமாய் அரசியல் செய்வதுதான். இப்படி எல்லாம் செய்தால் தமிழ் நாட்டு மக்கள் தங்களுக்கு பயந்து கொண்டு ஆதரவு கொடுப்பார்கள் என்ற எண்ணத்தில் இருக்கி றார்கள். ஆனால் தமிழ்நாட்டை பொறுத்தவரை இந்த திட்டங்களை எல்லாம் நாம் நம்முடைய நிதியை வைத்தே அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முதல்வர் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே கல்விக்கு நமக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் கல்விக்கான பணியை மிகத் தீவிரமாக நம்முடைய முதல்வர் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# “முழு திருப்தியுடன் நீதியின் மாணவனாக விடைபெறுகிறேன்” உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் உருக்கம்

புதுடெல்லி, நவ.23-

வழக்கறிஞர் மற்றும் நீதிபதியாக 40 ஆண்டு கால பயணத்தை முடித்துக்கொண்டு முழு திருப்தி மற்றும் மனநிறைவுடன் விடைபெறுவதாகவும், நீதியின் மாணவனாக விடைபெறுவதாகவும், தனது கடைசி வேலை நாளான நேற்று (நவம்பர் 21) நடந்த பிரிவு உபச்சார விழாவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் கூறினார்.



நேற்று மாலையில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் (SCBA) நடத்திய பிரிவு உபச்சார விழாவில் உரையாற்றிய 52வது தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், கிரீமிலேயர் தீர்ப்புக்காக தனது சொந்த சமூகத்தினரிடமிருந்து எதிர்கொண்ட கோபத்தை நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து பேசிய அவர், “அரசியலமைப்பின் தீவிர மாணவனாக, சமத்துவம், நீதி, சுதந்திரம் மற்றும் சகோதரத்துவத்தின் நற்பண்புகள் எப்போதும் என் இதயத்துக்கு நெருக்கமானவை. அமராவதியில் ஒரு எளிய பின்னணி மற்றும் அதிகம் அறியப்படாத இடத்திலிருந்து 40 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய என் பயணத்தில் நான் மிகவும் திருப்தி அடைகிறேன்.

டெல்லியில் ஒரு சிறந்த பள்ளியில் படிக்கும் ஒரு மூத்த ஐஏஎஸ் அதிகாரியின் மகனை ஒரு விவசாயியின் மகனுடன் போட்டியிட வைக்க முடியும் என்பதற்கு நான் ஓர் உதாரணம். நான் கடைசியாக இந்த நீதிமன்ற அறையை விட்டு வெளியேறும்போது, இந்த நீதிமன்றத்தை விட்டு வெளியேறும்போது, முழு திருப்தி உணர்வுடன், இந்த நாட்டுக்காக என்னால் முடிந்ததைச் செய்திருக்கிறேன் என்ற முழு மனநிறைவுடன் விடை பெறுகிறேன்.


அரசியலமைப்பு எப்போதும் நிலையானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அது எப்போதும் பரிணாம வளர்ச்சி அடையும். எனவே, நீதிமன்றங்கள் சூழலுக்கு ஏற்ப செயல்பட வேண்டும். ஒரு வழக்கறிஞராகவும், உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் இருந்தபோது, இதை ஒரு அதிகாரப் பதவியாக பார்க்கவில்லை. மாறாக சமூகத்திற்கும், தேசத்திற்கும் சேவை செய்வதற்கான வாய்ப்பாக நம்பினேன்.” என்றார்.

மே 14 அன்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்ற பி.ஆர்.கவாயின் பதவிக்காலம் நவம்பர் 23 ஞாயிற்றுக்கிழமை நிறைவடைகிறது. இதன்படி நேற்று (நவம்பர் 21) அவரது கடைசி வேலை நாளாக இருந்தது. உச்ச நீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட சூர்ய காந்த் நவம்பர் 24 அன்று பதவியேற்கிறார்.

# குரூப்2 தேர்வு எழுதியவர்களுக்கு முக்கிய அறிவிப்பு: பிளஸ் 2வில் அறிவியல் பாடம் படித்தால் கால்நடை ஆய்வாளர் பதவிக்கு வாய்ப்பு

சென்னை, நவ.23-

டிஎன்பிஎஸ்சி ஒருங்கிணைந்த குரூப்2 மற்றும் குரூப்2ஏ



முதல்நிலைத் தேர்வு கடந்த செப்.28ம் தேதி நடைபெற்றது. 645 காலிப்பணியிடங்களை நிரப்ப நடத்தப்பட்ட இத்தேர்வை 4 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் எழுதியுள்ளனர். தேர்வு முடிவு டிசம்பரில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு கூடுதலாக 625 பணியிடங்கள் சேர்க்கப்பட்டு காலியிடங்களின் எண்ணிக்கை 1,270 ஆக உயர்ந்துள்ளது. டிஎன்பிஎஸ்சி பிற்சேர்க்கை அறிவிப்பின்படி தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவை உதவிப் பிரிவு அலுவலர், கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை ஆய்வாளர் (கிரேடு 2) உள்ளிட்ட புதிய பதவிகளும் இடம் பெற்றுள்ளன.

இதில் கால்நடை ஆய்வாளர் பதவியில் மட்டும் 439 இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த பதவிக்கு பட்டப்படிப்புடன் பிளஸ் 2வில் உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் பாடம் படித்திருக்க வேண்டும் என்று கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஏ.சண்முகசுந்தரம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த ஜூலை 15ம் தேதி வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி ஒருங்கிணைந்த குரூப்2 மற்றும் குரூப் 2ஏ பணிகளில் அடங்கியுள்ள பதவிகளுக்கான முதல்நிலைத்தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்கள் கால்நடை ஆய்வாளர் பணி தொடர்பாக, பிளஸ் 2வில் உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் ஏதேனும் ஒன்றை நீங் கள் படித்திருக்கிறீர்களா? என்ற பத்தியில் ‘ஆம்’ அல்லது ‘இல்லை’ (‘எஸ்’ ஆர் ‘நோ’) என்பதை பதிவு செய்ய வேண்டும்.

இதுதொடர்பாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) ஓடிஆர் ‘ரிஓபன்’ செய்யப்பட்டுள்ளது. இது நவ.22 (இன்று) முதல் 25ம் தேதி நள்ளிரவு 11.59 மணி வரை 4 நாட்கள் திறந்திருக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# காஞ்சியில் மக்களை சந்திக்கும் விஜய்: முக்கிய அறிவுறுத்தல்களை வெளியிட்ட புஸ்ஸி ஆனந்த்

சென்னை, நவ.23-

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நாளை (நவ.23) காஞ்சிபுரம் ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மக்களை சந்திக்கும் நிலையில், அதுகுறித்து முக்கிய அறிவுறுத்தல்களை அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பாக தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் வெளியிட்ட அறிக்கையில், “தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கலந்து கொள்ளும் உள்ளரங்கு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க உள்ளரங்கு சந்திப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த, QR குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 2000 பேர் மட்டுமே இந்த உள்ளரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கழகத்தினரும் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

கரூர் சம்பவத்துக்குப் பிறகு பொதுமக்களை சந்திக்காமல் இருக்கும் தவெக விஜய், நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் மக்கள் சந்திப்பை நடத்த திட்டமிட்டுள்ளார்.

தவெக தலைவர் விஜய் கடந்த செப்.27ம் தேதி கரூரில் பிரச்சாரம் மேற்கொண்டபோது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதன் பிறகு பொது நிகழ்வுகளில் விஜய் பங்கேற்காமல் இருந்து வந்தார். இதனிடையே, கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கே அழைத்து ஆறுதல் கூறினார்.

அண்மையில் கட்சியின் சிறப்பு பொதுக்குழுவை கூட்டிய விஜய், மீண்டும் மக்கள் சந்திப்புக்கு அவர் ஆயுத்தமானார். இதற்காக தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் பேரை தேர்வு செய்து ‘மக்கள் பாதுகாப்புப் படை’யை உருவாக்கினார். அவர்களுக்கு ராணுவம் மற்றும் காவல்துறையில் ஓய்வுபெற்ற அதிகாரிகளை கொண்டு பயிற்சியும் அளித்தார்.

இந்நிலையில், சேலத்தில் இருந்து டிச.4ம் தேதி முதல் மீண்டும் பிரசாரத்தைத் தொடங்க விஜய் முடிவு செய்தார். ஆனால் திருவண்ணாமலை திருக்கார்த்திகை திருவிழா உள்ளிட்ட சில பாதுகாப்புக் காரணங்களால் வேறு ஒரு தேதியில் பிரசாரத்தை வைத்துக்கொள்ள போலீஸார் அறிவுறுத்தினர்.

இதற்கிடையே, நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். இதற்காக கல்லூரி வளாக உள் அரங்கத்தில் போதுமான அளவு இருக்கைகளும், தடுப்பு வேலிகளும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. காலை 10 மணிக்கு இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ஆங்கில கற்றல் திறனை மேம்படுத்த நீலகிரி அரசு பள்ளிகளில் ‘ஜாலி போனிக்ஸ்’ திட்டம் தொடக்கம்

ஊட்டி, நவ.23-

நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில கற்றல் திறனை அதிகப்படுத்தும் வகையில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் வேடிக்கை முறையிலான ‘ஜாலி போனிக்ஸ்’ திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.



இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை சார்பில் குன்னூர், ஊட்டி, கூடலூர், கோத்தகிரி வட்டாரங்களில் இருந்து 20 அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊட்டியில் சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

மாணவர்களின் வாசிப்பு, எழுத்து, சொல் உச்சரிப்புத் திறன்களில் முன்னேற்றம் காணுதல், வகுப்பறை ஈடுபாட்டை அதிகரித்தல், ஆங்கில உச்சரிப்பை மேம்படுத்துதல், தொடக்க நிலை மாணவர்கள் ஆங்கிலத்தை நம்பிக் கையுடன் பயன்படுத்துதல் போன்ற முன்னேற்றச் செயல்பாடுகள் குறித்து ஆசிரியர்களுக்கு ஜாலி போனிக்ஸ் இந்தியா நிறுவன பயிற்சியாளர் கோமதி பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தகங்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாவட்ட கல்வி அலுவலர் சின்னமாது, உதவித் திட்ட அலுவலர் அர்ஜூனன், மாவட்ட ஆட்சியர் நேர்முக எழுத்தர் (கல்வி) பிரமோத், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கு, செயற்கை ஒலியியல் மூலம் ஆங்கில எழுத்தறிவு கற்பிப்பதற்கு வேடிக்கையான மற்றும் குழந்தைத்தனமான அணுகுமுறையே ‘ஜாலி போனிக்ஸ்’ பயிற்சி முறை என அழைக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளில் மட்டும் இருந்த இப்பயிற்சி, தனியார் அமைப்புகள் சார்பில் அரசுப் பள்ளிகளிலும் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ‘ஜாலி போனிக்ஸ்’ மற்றும் ‘ஜாலி கிராமர்’ பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், தமிழ்வழி பயிலும் மாணவர்கள், ஆங்கில எழுத்துகளில் உச்சரிப்பை எளிமையாக கற்க முடியும், என்றனர்.

# வன்முறையை தூண்டும் வகையில் வலைதளத்தில் பதிவிட்டதாக ஆதவ் அர்ஜுனா மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு ரத்து

சென்னை, நவ.23-

கரூரில் கடந்த செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, கட்சி நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். அதை விமர்சிக்கும் விதமாக தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, எக்ஸ் வலைதளத்தில், ‘இலங்கை, நேபாளம்போல தமிழகத்திலும் புரட்சி வெடிக்கும்’ என்று பதிவிட்டார்.

இதையடுத்து, பொது அமைதிக்கு பங்கம் விளைவித்து, வன்முறையைத் தூண்டும் வகையில் பதிவிட்டதாகக் கூறி அவர் மீது சென்னை சைபர் க்ரைம் போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆதவ் அர்ஜுனா மனு தாக்கல் செய்தார்.

நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பு இந்த மனு மீதான விசாரணை நடந்தது. அப்போது, ஆதவ் அர்ஜுனா தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, தவெக வழக்கறிஞர் எஸ். அறிவழகன் ஆகியோர் ஆஜராகி, ‘‘ஆதவ் அர்ஜுனாவின் வலை தளப் பதிவு, வெறுப்பு பேச்சு என்ற வரையறைக்குள் வராது.

அது கரூர் சம்பவம் தொடர்பான கோபத்தின் வெளிப்பாடு. தனது பதிவை 34 நிமிடங்களில் அவரே முன்வந்து நீக்கிவிட்டார். இதனால் எங்கும் புரட்சி வெடிக்கவில்லை. சட்டம் ஒழுங்கு கெடவில்லை. ஆனால், போலீஸார் அரசியல் உள்நோக்கத்துடன் 18 மணி நேரம் கழித்தே அவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அதை ரத்து செய்ய வேண்டும்’’என்றனர். அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் கேஎம்டி. முகிலன் வாதிடும்போது, ‘‘வன்முறையைத் தூண்டும் வகையில் பதிவிட்டதால்தான் ஆதவ் அர்ஜுனா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள் ளது. மனுதாரரின் பதிவை லட்சம் பேர் பார்த்துள்ளனர்.

வெறுப்பு பேச்சுகள் தொடர்பாக போலீஸார் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்யலாம் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்பதால், இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என மனுதாரர் கோர முடியாது ’’என்றனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பிறப்பித்த உத்தரவு: ஆதவ் அர்ஜுனாவின் எக்ஸ் வலைதளப்பதிவு வன்முறையையோ, வெறுப்பையோ தூண்டும் வகையில் இல்லை. மாறாக, அரசின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தும் நோக்கில் இதற்காக இளைஞர்கள் போராடக்கூடும் என எச்சரிக்கை செய்யும் விதமாகத்தான் இருந்துள்ளது.

7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கும் வழக்குகளில் ஆரம்ப கட்ட விசாரணை நடத்தி அதன் பிறகே வழக்குப்பதிவு செய்ய வேண்டும். ஆனால், இந்த வழக்கில் அதுபோன்ற நடைமுறை பின்பற்றப்படவில்லை என்பதால் ஆதவ் அர்ஜுனா மீதான வழக்கை ரத்து செய்கிறேன். இவ்வாறு நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000